சிறப்புக் கவனம்

அனுப்புநர்
திரு. த. ஆபிரகம், இ.ஆ.ப.,
சமூக நல ஆணையர்,
2வது தளம், பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை–600 015.

பெறுநர்
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சஉதி)
சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்கள்
கூடுதல் கல்வி அலுவலர், பெருநகர மாநகராட்சி,
சென்னை–600 003.

ந.க.எண். 31645/சஉதி–2/2017 நாள். 16 .10.2019

ஐயா,

பொருள் சமூக நல ஆணையரகம் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – வட கிழக்கு பருவமழை துவங்கவிருப்பதையொட்டி சத்துணவு மையங்களை பராமரிப்பது தொடர்பாக சில அறிவுரைகள்–வழங்குவது – தொடர்பாக.

பார்வை அரசுச் செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அவர்களது ஆய்வுக் கூட்ட அறிவுரைகள்

---------

அரசுச் செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அவர்கள் தலைமையில் 14.10.2019 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் போது பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டது. அதில் ஒன்று வட கிழக்கு பருவமழை விரைவில் வரவிருப்பதால் சத்துணவு மையங்களை முறையாக பராமரித்திட தொடர்புடைய அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கிடுமாறும் அறிவுரை வழங்கப்பட்டது. எனவே மாவட்ட அலுவலர்கள் சத்துணவு மையங்களை முறையாக பராமரித்திட கீழ்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. சத்துணவு மையங்களை ஆய்வு செய்து மையக் கட்டடங்கள் எந்த ஆண்டில் கட்டப்பட்டது, அவை வலுவான நிலையில் உள்ளதா என கண்டறியவேண்டும். மேலும் அம்மையத்தை தொடர்ந்து பயன்படுத்த இயலுமா எனவும், மழைக் காலத்தில் மேற்கூரையில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளதாக கண்டறியப்பட்டால் மேற்கூரை மேல் தண்ணீர் வடிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதோடு, அம்மைய கட்டடம் பயன்படுத்த இயலாத நிலையிலிருந்தால், உடனடியாக மாற்று ஏற்பாடு செய்யவேண்டும். சிறு பழுதுகளாக இருப்பின் உடன் நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

2. சத்துணவு மையங்களில் பாதுகாக்கப்படும் உணவுப் பொருட்கள் மழைக்காலத்தில் மழை நீர் புகுந்து உணவுப் பொருட்கள் கெட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளவும், எலி போன்ற உயிரினங்கள் உணவுப் பொருட்களில் புகுந்து உணவுப் பொருட்களை சேதப்படுத்த வாய்ப்புள்ளதால், எலி, பூச்சிகள் புகாதவாறு பாதுகாத்திட, சத்துணவுப் பணியாளர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. சத்துணவு மையக் கட்டடங்களின் மேற்கூரையில் மழை நீர் தேங்கி நின்றாலோ அல்லது சுவர்களில் நீர்கசிவு ஏற்பட்டாலோ மின்இணைப்புகளில் தண்ணீர் புகுந்து மின் கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே அவ்வாறு மின் கசிவு ஏற்படும் மையங்களை கண்டறிந்து போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மழைக் காலங்களில் மின் இணைப்புகளை கையாள்வது தொடர்பாக சத்துணவுப் பணியாளர்களுக்கு போதிய விழிப்புணர்வினை ஏற்படுத்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. வைப்பறையுடன் கூடிய சமையலறைகளில் பயன்படுத்த இயலாத சாமான்கள், சாக்குகள், பாத்திரங்கள் இருப்பின் அவற்றை உடனடியாக விதிகளை பின்பற்றி ஏலம் விட்டு அதில் கிடைக்கும் பணத்தை அரசுக் கணக்கில் செலுத்திடவும், பயனற்ற பொருட்கள் அகற்றி மையத்தை சுத்தமாக பராமரிக்க தக்க நடவடிக்கை மேற்ககொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. குடிநீர் சுத்தமாக உள்ளதா என்பதை ஆராய்ந்து, தேவைப்படின் குடிநீர் தொட்டிகளை பள்ளித் தலைமை ஆசிரியர் கவனத்திற்கு கொண்டு வந்து சுத்தம் செய்திடவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் குழந்தைகளுக்க் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும்.

இவ்விபரங்களை அனைத்து சத்துணவு பணியாளர்களுக்கும் ஆய்வு கூட்டத்தின் போது தெரிவிக்கவும், இக்கடிதம் கிடைக்கப் பெற்றதற்கு ஒப்புதல் அளிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– த. ஆபிரகாம்
சமூக நல ஆணையர்

// ஆணைப்படி //

சமூக நல ஆணையருக்காக,

16.10.19